# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்.

**முன்னிலை:-செல்வி.S.பத்மாவதி .ML.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

2026-ம் ஆண்டு ஜீலை மாதம் 28-ம் நாள் செவ்வாய்கிழமை

இ.ம.எண்.196/2026 இன் அ.வ.எண்.177/2016

தனுசு என்கிற பாலகிருஷ்ணன் ...மனுதாரர்/பிரதிவாதி

//எதிர்//

தவகுரு பரம்பறை அறங்காவலர்
மாசிமகம் அறக்கட்டளை of
கோவிந்தராஜ் கோயில்,
பின்னத்தூர், சிதம்பரம் தாலுக்கா. ...எதிர்மனுதாரர் /வாதி

இம்மனு கடந்த 08.07.2026 அன்று என்முன்னர் இறுதியாக விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ராமதாஸ் அவர்கள் அஜராகியும், எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராஜவேலவன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

## உத்தரவு

மனு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை.8, விதி.9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

PADMAVATHI Digitally signed by PADMAVATHI
Date: 2026.07.28 17:17:37 +0530

**2. மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-**

தாவா வழக்கு விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து, தற்போது வாதி தரப்பு குறுக்கு விசாரணை நிலையில் உள்ளது. இதற்கு முன்பு தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மனுதாரர் தரப்பில் சில முக்கிய விபரங்கள் விடுபட்டுள்ளதால், தற்போது உண்மையான விபரங்களுடன் கூடுதல் எதிர்வழக்குரையை மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றால் தான், அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி ஏற்படும் என்றும், எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள கோரி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்/ வாதி தாக்கல் செய்த எதிரிருரையின் சுருக்கம்:-**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், ஆட்சேபனையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனு வழக்கை காலதாமதம் செய்யும் நோக்கத்தோடு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், வழக்கின் விசாரணை தொடங்கப்பட்ட வா.சா.1 08.06.2026-ல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்காக நிலுவையில் இருப்பதாகவும், தற்போது சரியான காரணங்கள் கூறாமல் விசாரணை ஆரம்பித்த பிறகு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு ஏற்கத்தக்கதல்ல எ்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் ஏற்கனவே கூடுதல்

PADMAVATHI Digitally signed by PADMAVATHI
Date: 2026.07.28 17:17:47 +0530

எதிர்வழக்குரையை இ.ம.எண்.346/2023-ன் படி பிராது திருத்தத்திற்கு பிறகு தாக்கல் செய்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது கொடுக்கப்படும் கூடுதல் எதிர்வழக்குரையின் அம்சங்களை ஏற்கனவே தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட முடியவில்லை என்பதற்கான காரணத்தை கூறவில்லை என்றும், Due Diligence ஆக செயல்பட்டிருந்தபோதிலும், கூடுதல் எதிர்வழக்குரை அம்சங்களை குறிப்பிடாமல் விடுப்பட்டதாக கோரவும் இல்லை என்றும், மனு மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்ட மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், முக்கியமாக தற்போது மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் கூடுதல் எதிர்வழக்குரை அம்சங்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட முதலாவது கூடுதல் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனவே மனு தள்ளுபடிக்குரியது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் எதுவும் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>6. தீர்வு :-</u>**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கு விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது.

6.1) மனுவில் ஏற்கனவே தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையில் மனுதாரர்

PADMAVATHI Digitally signed by PADMAVATHI
Date: 2026.07.28 17:18:01 +0530

தரப்பில் சில முக்கிய விபரங்கள் விடுபட்டுள்ளதால், தற்போது உண்மையான விபரங்களுடன் கூடுதல் எதிர்வழக்குரையை மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுவை அனுமதிக்க வேண்டியிருப்பதையும் **மாறாக**, மனுதாரர் முதலாவதாக கூடுதல் எதிர்வழக்குரையை இ.ம.எண்.346/2023-ன் படி பிராது திருத்தத்திற்கு பிறகு தாக்கல் செய்திருப்பதாகவும், சரியான காரணங்கள் கூறாமல் விசாரணை ஆரம்பித்த பிறகு, தற்போது கொடுக்கப்படும் கூடுதல் எதிர்வழக்குரையின் அம்சங்களை ஏற்கனவே தாக்கல் செய்துள்ள முதல் கூடுதல் எதிர்வழக்குரையில் ஏன் குறிப்பிடப்பட முடியவில்லை என்பதற்கான காரணத்தை கூறாமல் மற்றும் Due Diligence அம்சம் காரணமாகவும், மிகவும் காலதாமதத்துடன் இரண்டாவது கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்க தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு நிலைக்கத்தக்கதல்ல என்று ஆட்சேபிக்கபட்டிருப்பதையும் கருத்தில் கொண்டு முதலாவது எதிர்வழக்குரை அம்சங்களும், இரண்டாவது எதிர்வழக்குரை அம்சங்களும் எதிர்மனுதாரர் தரப்பில் கூறுவது போல் ஒன்றாக இருக்கின்றதா? என்று பரிசீலனை செய்து பார்க்கும் பொழுது, வேறுபட்ட சங்கதிகள் இருப்பதை காண முடிகிறது. எதிர்வழக்குரை சங்கதிகள் எல்லாம் தற்போது இந்த மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய சங்கதிகள் அல்ல என்பதாலும் அசல் வழக்கு விசாரணையில் தீர்வு காணப்பட வேண்டியது என்பதாலும், அசல் வழக்கின் நிலையை கண்ணுறும்போது அசல் வழக்கானது PW1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி நிலையில்தான் உள்ளதாலும், நீதியின் நலன்கருதி மனுதாரருக்கு உரிய வாய்ப்பளிப்பது அவசியம் என்று இந்நீதிமனறம் முடிவு செய்கிறது. வாதிக்கு பதில்வழக்குரை தாக்கல் செய்ய

PADMAVATHI Digitally signed by PADMAVATHI
Date: 2026.07.28 17:18:11 +0530

வாய்ப்புள்ளதாலும், கூடுதல் எதிர் வழக்குரையை ஏற்றுக்கொண்டு மனுதாரரின் மனுவினை இந்நிலையில் அனுமதிக்கலாம் என்று நீதிமன்றம் தீர்வு காண்கிறது. காலதாமதம் என குறிப்பிட்டு ஆட்சேபிக்கப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு எதிர்மானுதாரர்/வாதிக்கு மனுதாரர் செலவு தொகை கொடுப்பது அவசியம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7. முடிவாக, மனுதாரரின் மனு அனுமதிக்கப்படுகிறது. அசல் வழக்கில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் வழக்குரை ஏற்கப்படுகிறது. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.300/-யை 04.08.2026 -க்குள் வழங்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல, சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 28-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

PADMAVATHI Digitally signed by PADMAVATHI
Date: 2026.07.28 17:18:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை**

PADMAVATHI Digitally signed by PADMAVATHI
Date: 2026.07.28 17:18:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.